[1970 செப்டம்பர் 3

THIRU T. MARTIN : On a point of Order, Sir. In the rank of Ministers, the Hon. Minister for Finance . . . .

MR. SPEAKER : There is no point of Order.

Tamil Nadu Paddy and Rice Movement Control Order

* 221 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the Government of Tamil Nadu has declared a five mile belt area around the district of Thanjavur as 'Notified area under the Tamil Nadu Paddy and Rice-movement Control Order?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 'இல்லை'.

திரு. கே. விநயகம் : தஞ்சை மாவட்டத்தைச் சுற்றி 5 மைல் எல்லையோரப் பகுதியை அறிக்கையிடப்பட்ட பகுதியாகப் போட்ட காரணம் அங்கிருந்து அரிசி வெளியே போகாமல் இருந்தால் அரிசி விலை குறையும் என்ற நோக்கத்தோடுதானே போட்டார்கள். ஆனால் . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை என்று சொன்னேன்.

திரு. கே. விநயகம் : இல்லை என்று தெரிவித்தார்கள். தங்களுடைய இலாக்காவின் மூலம் வந்த ஒரு செய்தியைப் பார்த்து விட்டுத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். அப்படிப் போட்டது தப்பா? இலாக்கா கொடுத்த அறிக்கை சரியா அல்லது தாங்கள் இப்பொழுது கூறுவது சரியா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதைப் போடலாமா என்று ஆலோசனை செய்யப்பட்டது உண்மை. ஆனால், வேண்டியதில்லை என்று, கைவிடப்பட்டு விட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, 15 மைல் பெல்ட் ஏரியா என்று கன்னியாகுமரி ஜில்லாவிற்கு விதி பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தால் இரு தாலுக்காக்களிலே இன்றைக்கு உணவு விநியோகத்திற்குப் பெரும் கஷ்டம் இருக்கிறது. அங்கிருக்கும் கடைகளிலே சரியாக அரிசி விநியோகம் நடக்கவில்லை. மிகவும் புளித்துப்போன அரிசியைத் தருகிறார்கள். ஆகவே, அடையாளக் கார்டு முறையை உருவாக்க வேண்டுமென்று கான்பரன்ஸ் கூடி, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கூடி முடிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பிரச்னையை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஓலவக் கோடு தாலுக்காவைப்பற்றி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் அவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவெடுக்கப்படும்.